

2024 நாடாளுமன்றத் தேர்தல்
'இந்தியா கூட்டணி'
வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 2–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**29.03.2024, வெள்ளிக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | ஹரிஹரன் பஜார் வீதி, பொன்னேரி, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். | திருவள்ளூர் |
| 2 | காலை 11.30 மணி | மாநகராட்சி அலுவலகம் அருகில், ஆவடி, திருவள்ளூர் மத்திய மாவட்டம். | திருவள்ளூர் |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 3 | மாலை 4.30 மணி | நீதிமன்றம் எதிரில், ஆலந்தூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | ஸ்ரீபெரும்புதூர் |
| 4 | மாலை 5.30 மணி | பழைய டிரங்க் சாலை, பல்லாவரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | ஸ்ரீபெரும்புதூர் |
| 5 | இரவு 6.30 மணி | காந்தி மார்க்கெட், தாம்பரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | ஸ்ரீபெரும்புதூர் |
| 6 | இரவு 7.30 மணி | பாவேந்தர் சாலை, மறைமலைநகர் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | காஞ்சிபுரம் |

**30.03.2024, சனிக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | அண்ணா பேருந்து நிலையம் அருகில், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் | காஞ்சிபுரம் |
| 2 | மதியம் 12.00 மணி | நான்கு முனை சிக்னல் சந்திப்பு, விழுப்புரம், விழுப்புரம் தெற்கு மாவட்டம். | விழுப்புரம் |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 3 | மாலை 4.30 மணி | மணிக்கூண்டு சாலை, உளுந்தூர்ப்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம். | விழுப்புரம் |
| 4 | மாலை 5.30 மணி | கடைவீதி, விருத்தாசலம், கடலூர் மேற்கு மாவட்டம். | கடலூர் |
| 5 | இரவு 7.00 மணி | நான்கு சாலை சந்திப்பு, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் | சிதம்பரம் |
| 6 | இரவு 8.00 மணி | கடைவீதி நான்கு முனை சந்திப்பு, காட்டுமன்னார்கோவில், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |

**31.03.2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | தெற்கு ரத வீதி, சிதம்பரம், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |
| 2 | காலை 11.30 மணி | சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு, கடலூர், கடலூர் கிழக்கு மாவட்டம் | கடலூர் |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 3 | மாலை 4.30 மணி | வில்லியனூர் கிழக்கு மாட வீதி சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 4 | மாலை 5.30 மணி | மரப்பாலம் சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 5 | இரவு 6.30 மணி | அண்ணா சதுக்கம், புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 27–03–2024.

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் – ஆற்றல்மிகு தளகர்த்தர்

# கணேசமூர்த்தி மறைவு துயரத்தைத் தருகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!



**சென்னை, மார்ச் 29 - ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் - ஆற்றல்மிகு தளகர்த்தர் கணேசமூர்த்தி மறைவு சொல்லொணாத் துயரத்தைத் தருகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி அவர்கள் மறைந்த செய்தியறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கிய அவர், ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளைத் திறம்பட ஆற்றியவர். பின்னர், அண்ணன் வைகோ அவர்களுடன் இணைந்து பயணப்பட்டார். ஆற்றல்மிகு தளகர்த்தராகச் செயல்பட்ட அவரது இழப்பு சொல்லொணாத் துயரத்தைத் தருகிறது.

அவரது பிரிவால் வாடும் ம.தி.மு.க. தொண்டர்களுக்கும், திராவிட இயக்கப் பற்றாளர்களுக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

என்னிடத்தில் வைத்திருந்த அன்பை மாற்றிக்கொள்ளாத

# ஈரோடு கணேசமூர்த்தி மறைந்துவிட்டாரே!

## அமைச்சர் துரைமுருகன் உருக்கம்!

'ஈரோடு கணேசமூர்த்தி மறைந்துவிட்டார்'
என்ற செய்தி கேட்டு பலத்த அதிர்ச்சிக்கு உள்ளானேன்!
கல்லூரி படிக்கிற காலம் தொட்டு
அவர் கண் மூடுகிறகாலம் வரையில்
எனக்கு இனிய நண்பர்!
மாணவ தி.மு.க.வில் மகத்தான சேவை செய்தவர்!
தி.மு.க.வில் மாவட்டக் கழகச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றியவர்!
ம.தி.மு.க.விற்கு அவர் சென்றபிறகும் கூட
தலைவரிடத்தில் மகத்தான மரியாதை வைத்திருந்தவர்!
அவர் மரணத்தை நோக்கி ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கிறார்
என்ற செய்தி எனக்கு வந்தபோதெல்லாம்
எப்படியும் பிழைத்துக் கொள்வார்
என்று பெரிதும் விரும்பி இருந்தேன்!
அவர் கட்சி மாறிய பொழுதும்,
என்னிடத்தில் வைத்திருந்த அன்பை மாற்றிக் கொள்ளாதவர்!
அவரை இழந்து வாடுகிற அவருடைய குடும்பத்தினருக்கும்
அவர் இழப்பால் பெரிதும் நிலைகுலைந்து போயிருக்கும்
என் நண்பர் வைகோவிற்கும்
என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்!



**துரைமுருகன்**
கழகப்பொதுச்செயலாளர்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆ.த. சதாசிவம்

**மார்ச் 29 (2017)**



ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் டாக்டர் அண்ணா மன்றத்தை துவக்கி, கழகப் பணியாற்ற தொடங்கிய இவர், நெருக்கடிகாலத்தில் 76வது வட்டப் பொறுப்பாளராகவும், பின்னர் ஆயிரம் விளக்கு பகுதி பிரதிநிதி, பகுதி பொருளாளர், மாவட்ட பிரதிநிதி என கழக அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தலைமை நிலைய அலுவலகச் செயலாளராக நியமிக்கப்பட்டு பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

'இந்து' நாளிதழில் பணியாற்றியதோடு, இந்து தொழிற் சங்கத்தில் பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும், தமிழ்நாடு மின்சார வாரிய ஆலோசனை குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

"இவரையும் அண்ணா அறிவாலயத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு – இணை பிரியாத அளவுக்கு தலைமைக் கழகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**